## அக்டோபர் - 4

**"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்."**
**- மத் 4 : 19**

ஜீவியத்தின் எல்லா காரியங்களும் வருங்காலம் பூராவுக்கும், லாபகரமாயிருக்கிற படிப்பினைகளை நமக்குப் போதிக்கும். நாம் அந்தப்படிப்பினைகளை ஏற்றுக்கொள்ளுவோமானால், ஒருவேளை மீன்பிடிக்கும் தொழிலில் சிறப்பாக உதவுகிற எதுவோ இருந்தது. தங்களுடைய மீதியான ஜீவியங்களில் அப்போஸ்தலர் ஈடுப்பட்டிருக்க வேண்டிய அந்த பெரிய வேலையைப் போல சிறப்பாக எதுவோ இருந்தது. நம்முடைய கர்த்தர் தம்முடைய அழைப்பில் அதைத் தெரிவிக்கிறார். மீன்பிடிக்கும் கலைக்கு சக்தியும், சமயத்திற்கேற்ற சாதுரியமும், தகுந்த தூண்டில் முள்ளில் வைக்கப்படும் ஆகாரமும் வேண்டியிருக்கின்றன. அதோடு, மீன்பிடிக்கிறவன் மீன்களுக்கு மறைவாக இருக்கின்றான். நாம் ஈடுபட்டிருப்பதற்காக கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற சிலாக்கியமாகிய ஆவிக்கடுத்த மீன்பிடிக்கும் கலைக்கு இந்த நான்கு காரியங்களும் தேவையாயிருக்கின்றன. யாராவது மீன்களை நீரிலிருந்து பிடித்து எடுத்துக் கொள்ள பிரயாசப்படுகிறார்கள் என்று காணும்போது அவைகள் எளிதாக பயமடைகின்றன. அதுபோலவே, மனுஷர் முக்கியமாகத் தங்களுடைய சுயாதீனங்களை இழந்து விடுவோமென்று மிகச்சிறிய சந்தேகம் கொண்டாலும், ஏதாகிலும் ஒன்றால் பிடிபட அஞ்சுகிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். இவ்விதமாக பிரதிஷ்டை உலகுக்குத் தோன்றுகிறது.

**- Z ’04, 26, 27 (R 3307)**

மீன்பிடிக்கிறவர்களாக, நாம் விழிப்புள்ளவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவும், மிதமானவர்களாகவும், விடாமுயற்சியுடையவர்களாகவும், தங்களை காட்டிக் கொள்ளாதவர்களாகவும், சமயத்திற்கேற்ற சாதுரியமுள்ளவர்களாகவும், அடையாளமான மீன்களையும், மீன்பிடிக்கும் கலையையும், நேசிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். தகுதியான பாஷை, சத்தியம், மனித சுபாவத்தின் அறிவு, தொழிலில் ஈடுபடும் திறமை, ஒத்திராத சூழ்நிலையில் ஊடுருவ கூடாதத் தன்மை, இவைகளால் நாம் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எல்லா நேரங்களிலும், சபைக்கு உள்ளேயும், வெளியேயும் "மனிதரை பிடிக்க" நாம் நாட வேண்டும். நீதிமானாகுதல் பிரதிஷ்டை இவைகளின் தூண்டில்களையும், தூண்டில் முள்ளில் வைக்கப்படும் ஆகாரமாக, அடையாளமான மீனின் ருசிக்குப் பிரியமானதாகத் தோன்றுகிற அப்படிப்பட்ட சத்தியங்களையும், நாம் உபயோகிக்க வேண்டும். கர்த்தருக்கென்று நாம் "மனிதரை பிடிக்க" வேண்டுமானால், தூண்டில்களையும், நூல்களையும் எப்படி போட வேண்டுமென்பதிலும், கடிப்பதற்கு முன்னும், கடிக்கும் போதும் அடையாளமான மீன்களை நம்மிடமாய் இழுக்கும்போதும், அவைகளை கோற்கும் போதும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**- P ’34, 143.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 28:1; 1சாமு 3:4-10; 1நாளா 23:13; ஏசா 6:8-10; மத் 4:18,20-22; 9:9; லூக் 10:1,2; யோவா 1:43; ரோம 10:14,15; 2கொரி 5:18-20; எபி 5:4; மத் 10:7,11-13,16,25,27,28; 28:19,20; லூக் 24:48.

**கோபுர வாசிப்பு** : Z ’14, 308 (R 5554).

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சமாளிக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?